றான கருத்து மக்கள் மத்தியில் வந்தாகிவிட்டது. — அப்போது என்மீது பற்றும், பாசமும் கொண்ட அ. இ. அ. தி. மு. க. அரசு ரெனுவல் பிளானை எடுத்து வைத்துக்கொண்டு மனை ஒதுக்கிய திலிருந்து ப்ளான் அப்ரூவல் செய்தது வரையில் ஏதாவது முறை கேடுகள் இருக்கின்றனவா என்று சுமார் இரண்டாண்டுக்காலம் எல்லாக் கோப்புகளையும் சரிபார்த்து எந்த விதிமுறையும் மீறப்படவில்லை என்று தெரிந்ததும் எனக்கு ப்ளான் ரெனுவல் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும் எனக்குக் கொடுக்கப்பட்ட மனை ஒதுக்கீட்டில் ஏதாவது ஒழுங்கீனம் உள்ளதா என்று 1979 ஆம் ஆண்டு, எமர்ஜென்சி காலத்தில், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரால் எழுப்பப்பட்ட அந்தப்பிரச்சினைக்கு, முன்பிருந்த ஆளுநர் அவர்களுடைய ஆட்சியில் தமிழக அரசு கோப்புகளை எல்லாம் பரிசீலனை செய்து, முறையாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என அன்றைய ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

அதுமாத்திரமல்ல. வருமான வரி அதிகாரிகளுக்கும் இந்தப் பிரச்சினை அனுப்பப்பட்டு, அதிலே அவர்களும் அதிகக் கவனம் செலுத்தி, நான் மிசா-விலே இருந்தபோது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்னர் வருமான வரி அதிகாரிகள் வீட்டுவசதி வாரியத்திலே சென்று கோப்புகளையெல்லாம் சரி பார்த்து, ஒதுக்கப்பட்ட மனையில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்று கருதி என் மீது எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் திரும்பப் பெறப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. தீர்மானம்

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசியவர்மீது நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

இன்று முற்பகல் சுமார் 10-20 மணிக்குப் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசிய சென்னை நந்தம்பாக்கம், எஸ். எஸ். போஸ் தெருவில் குடியிருக்கும் ராமசாமியின் மகன் வெண்பா வீராசாமி என்று சொல்லிக் கொள்ளும் நபர் தற்போது பேரவைக் காவலரின் காவலில் இருக்கிறார். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அவரது செய்கை அவையினுடைய உரிமை மீறிய செயலாகும் என்பதைப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து மாண்புமிகு பேரவையின் முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். (குறுக்கீடுகள்).

திரு. எம். அப்துல் லத்தீப் : அந்த முறை தப்பு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தமிழ் அறிஞர் ஒருவர்தான் இப்படிப் போட்டிருக்கின்றார்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திற்கு நண்பர் திரு. திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப் போல ஆலோசனை வழங்க எல்லோருக்கும் உரிமையுண்டு. இந்த அவை சில நேரங்களிலே அதிர்ச்சி அடையக்கூடிய முறையில், அவையிலே உள்ளவர்கள் ஏதோ ஒருவிதமான நோக்கம் உள்ளது என்று எண்ணப்படும் வகையில் நடந்து கொள்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எனவே இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

'' இன்று முற்பகல் சுமார் 10-20 மணிக்குச் சட்டமன்றப் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசிய உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, சென்னை நந்தம்பாக்கம், எஸ்.எஸ். போஸ் தெருவில் குடியிருக்கும் ராமசாமியின் மகன் வெண்பா வீராசாமி என்று சொல்லிக்கொள்ளும் நபர் இந்தச் சட்டமன்றத்திலே நடைமுறைக்கு மாறாகப் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய செயல் இப்பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. இருப்பினும், இன்று பிற்பகல் 1 மணி வரை அவரைச் சட்டமன்றப் பேரவைக் காவலர் காவலில் வைக்கலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

7. விதி 109-இன் கீழ் உறுப்பினர் தன்னிலை விளக்கம்—தொடர்ச்சி.

சென்னையில் வீட்டுவசதி வாரியமனை ஒதுக்கீடு, அடுக்கு மாடிக் கட்டிட அனுமதி ஆகியவற்றில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் தனிப்பட்ட முறையிலே வருத்தப்பட்டுப் பேசுவது போல நான் உணர்கிறேன். அவரைக் குறைசொல்வதற்காகவோ அல்லது குற்றம் சாட்டவோ சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நான் சொல்வது, இரண்டு பேர்கள், அ.தி.மு.க. வினர் என்று சொன்னதால் சொன்னேன். இதை நான் தப்பு என்று